**OS No.420/2022**

**Dated:** 24.06.2024

**PW 1– முனியம்மாள் த/பெ.துரைசாமி**

**<u>1 முதல் 7 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

துரைசாமியின் தந்தையார் பெயர் மொளுகுகாரன் (எ) பாலன். 26.05.1989 தேதியிட்ட இரண்டு தானபத்திரங்களான வா.த.சா.ஆ.5 மற்றும் வா.த.சா.ஆ.6 யார் வாங்கினார்கள் என்று சொன்னால் நானும் என் அம்மாவும் போய் ரிஜிஸ்டர் ஆபிசில் வாங்கினோம் . மேற்படி வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் என் அம்மா பெயர் இல்லை என்றும் கந்தசாமி பெயர் உள்ளது என்று சொன்னால் எனக்கு எழுத படிக்க தெரியாது . மேற்படி வா.த.சா.ஆ.5 மற்றம் வா .த.சா.சஆ.6 ஆவணங்கள் என்னாலேயோ அல்லது அம்மாவாலேயோ வாங்கப்பட்டது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

பாலகிருஷ்ணன் 26.05.1989 தேதியிட்ட இரண்டு தானபத்திரம் மூலமாக சுவாதீனத்தில் இருந்துவருகிறார் என்று சொன்னால் அவர்கள் திருட்டு பத்திரம் செய்துள்ளார்கள் எனக்கு தெரியாது . அவர்கள் சுவாதீன அனுபவத்தை அனுசரித்து பட்டாவும் பாலகிருஷ்ணன் பெயரில் உள்ளது என்று சொன்னால் அது தவறு . என் தாத்தா பெயரில் பட்டா இருந்ததை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன் . அவ்வாறு பார்த்ததை ஆவணமாக எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன் . அவ்வாறு என் தாத்தா பெயரிலுள்ள பட்டா ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

என் தாத்தா பெயரில் எந்த பட்டாவும் இல்லை என்றும் அதனால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது தவறு . அந்த தானபத்திரங்கள் அடிப்படையில் பாலகிருஷ்ணன் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டது என்றும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவிற்கு மூளை கோளாறு ஏற்பட்டபோது என் அப்பாவிற்கு தெரியாமல் தானபத்திரங்களை பாலகிருஷ்ணன் பெற்றுள்ளார் . அந்த சமயத்தில் அந்த விவரம் எனக்கு தெரியாது . யார் சொல்லி என் அப்பாவிற்கு மூளை கோளாறு இருந்தது என்று சொன்னால் நான்தான் சொல்கிறேன்.

அவ்வாறு மூளை கோளாறு என் அப்பாவிற்கு இருந்த விவரத்தைநான் என் நோட்டிசிலோ , வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியிருக்கிறேனா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. என் அப்பாவிற்கு மூளை கோளாறு இருந்த விவரங்கள் பொய்யான சங்கதி என்று சொன்னால் அது சரியல்ல . இந்த வழக்கு போடும்போது சொத்தின் பட்டா யார் பெயரில் இருந்தது என்று தெரிந்துக்கொண்டேனா என்று சொன்னால் என் தாத்தா பெயரில் இருந்திருக்கும்.

பாலகிருஷ்ணன் பெயரில்தான் பட்டா இருந்து வருகிறது என்று சொன்னால் திருட்டுபத்திரம் பெயரில் பட்டா வாங்கியுள்ளார். அந்த திருட்டு பத்திரங்கள் என்று சொல்லும் பட்சத்தில் அதை ரத்து செய்வதற்கு எதாவது பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் அவ்வாறு ஏதும் கோரவில்லை . 26.05.1989 முதல் கடந்த 33 வருடங்களாக பாலகிருஷ்ணன் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் நானும் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். என் அப்பா நிலத்தில் நானும்தான் நெல் விவசாயம் செய்து வருகிறேன். அவ்வாறு நான் விவசாயம் செய்யும் நிலத்தின் செக்குபந்தி ஒருபக்கத்தில் புட்டபாலா உள்ளார் . மற்றொரு பக்கத்தில் முனியப்பா, மேற்குபுறம் தோலமுத்தார். மற்றொருபுறம் ஊர்மக்கள் நிலம் வாங்கியுள்ளார்.

நான் ஒரு ஏக்கர் மட்டும் நெல் பயிர் செய்து வருகிறேன். மீதி ஏக்கரை பாலகிருஷ்ணன் செய்து வருகிறார். நான் நெல் பயிர் செய்யும் ஒரு ஏக்கர் நிலத்தை சுற்றி 4 பக்கத்திலும் பாலகிருஷ்ணன்தான் உள்ளார். அந்த ஒரு ஏக்கர் நிலம் என் அப்பா உயிருடன் இருக்கும்போது கொடுத்த நிலம் ஆகும். அப்போதிருந்து பயிர்செய்து வருகிறேன். இந்த விவரங்களை என்னுடைய வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் அப்பா ஒரு ஏக்கர் நிலம் கொடுத்ததாகவும் , அதில் நான் விவசாயம் செய்து வருவதாகவும் சொல்லும் சங்கதிகள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்துக்களில் எனக்கு பாத்தியம் இருப்பதாக சொல்லும் விவரங்களும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. நானும் 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறோம் என்று சொல்லும் விவரமும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல . நான் துரைசாமியின் வாரிசு இல்லை என்றும், எனக்கு பாக பாத்தியமும் இல்லை என்றும் அதேபோல் நான் சொல்வதுபோல் கூட்டு சுவாதீனத்தில்ஏதும் இருந்ததில்லை என்று சொன்னால் அது தவறு . வக்கீல் நோட்டிசுக்கு தகவல் யாா் கொடுத்து என்றால் நானும் என் அம்மாவும் கொடுத்தோம்.

வழக்கு தாக்கல் செய்யும்போது தகவல்களை நானும் என் அம்மாவும் கொடுத்தோம். அந்த வழக்கை என் அம்மா தாக்கல் செய்யவில்லை. வாரிசு அடிப்படையில் நான்தான் தாக்கல் செய்தேன் . 13.10.2014 அன்று 9ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு ஒரு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. இதுவரையில் எனக்கு தெரியாது. (தற்போது சாட்சி வா.த.சா.ஆ.7 ஆவணம் தற்போதிலிருந்து 3 வருடத்திற்கு முன்பாக தெரிய வந்ததாக கூறுகிறார்.) அதேபோல் 06.11.2019ம் தேதி பாலகிருஷ்ணன் அவருடைய மகன் ராமகிருஷ்ணன், தமிழ்செல்வன், விக்னேஷ், துரைசாமி தானபத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாமல் எழுதிக்கொடுத்துள்ளார்.

அவர் தான பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் வழக்கு போடுவதற்கு முன்பாக தெரியவந்தது. நான் அனுப்பிய நோட்டிஸ்ற்கு பதில் நோட்டிஸ் 1 முதல் 3 மற்றும் 9 ஆகியோரால் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் பதில் நோட்டிஸ் கொடுக்கப்பட்டது. அந்த நோட்டிசிலும் எனக்கு எந்த பாத்தியமும், சுவாதீனமும் இல்லை என்றுதான் அதில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறுதான் அதில் சொல்லப்பட்டுள்ளது . துரைசாமியின் தாத்தா பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்று சொனனால் ஒன்றாகத்தான் இருந்தோம் ஆனால் அதுப்பற்றி தெரியாது . என் தாத்தா பெயரில் எந்த சொத்தும் இல்லாதபட்சத்தில் நான் எந்த உரிமையும்

கோரமுடியாது என்று சொன்னால் அது தவறு . என் அப்பா சொத்து என்பதால் நான் உரிமை கோருகிறேன்.

என் அப்பா உயிருடன் இருந்த காலத்திலேயே அவர் பாலகிருஷ்ணன் பெயரில் தானபத்திரம் எழுதிவைத்து சுவாதீனம் ஒப்படைத்து விட்டதால் எனக்கு எந்த உரிமையும் அந்த சொத்தில் கிடையாது என்று சொன்னால் அது தவறு . நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லாமல் கூட்டு சுவாதீனம் இருந்ததாக சொல்லி நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது தவறு . நான் செலுத்தியிருக்கும் நிதிமன்ற கட்டணமும் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையோ , பாத்தியமோ, பாகமோ, சுவாதீனமோ இல்லை என்று சொன்னால் அது தவறு . அக்கிரம லாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்கு போட்டு நான் பொய் வாக்குமூலம் தாக்கல் செய்து பொய்யாக தாக்கல் செய்கிறேன் என்று சொன்னால் அது தவறு . இந்த தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் அது தவறு.

Additional District Judge

V DAMODARAN

Digitally signed by V DAMODARAN